செய்தி வெளியீடு எண்.72-2017 நாள்: 29.12.2017

**விழுப்புரம் மாவட்டத்தில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பதிவுச் சான்று இன்றி எவரேனும் இறால் வளர்ப்பு உள்ளிட்ட கடல்வாழ் உயிரின வளர்ப்பினை பண்ணைகளில் மேற்கொண்டால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*****

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005ன் 13(1) மற்றும் 14 ஆகிய பிரிவுகளின் கீழ் அனுமதி பெறாமல் எவரேனும் இறால் வளர்ப்பு உள்ளிட்ட கடல்வாழ் உயிரின வளர்ப்பினை பண்ணைகளில் மேற்கொண்டால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனையோ அல்லது ரூ.1.00 லட்சம் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

மேலும் பட்டா நிலம், வனத்துறை நிலம் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பதிவுச் சான்று இன்றி இறால் பண்ணை அமைத்து வெளிநாட்டு இறால் வெனாமி மற்றும் வரி இறால் வளர்த்து வந்தால் உடனடியாக நிறுத்த வேண்டும். மீறி வளர்ப்பவர்கள் மீது கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இறால் வளர்ப்பிற்கு நிலத்தடி நீரினை பயன்படுத்தக் கூடாது எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.